**பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள், சென்னை 6**

**ந.க.எண் 023758/பிடி2/இ1/2024, நாள் 02.01.2025**

**பொருள் :** பள்ளிக் கல்வி – 2024–25 ஆம் கல்வியாண்டு – இரண்டாம் கட்டமாக 21 மாவட்டங்களைச் சார்ந்த விருப்பமுள்ள 12 ஆம் வகுப்பு மாணவர்கள் – வட்டார அளவில் உயர்கல்வி வழிகாட்டி மையம் – செயல்பாடுகள் சார்ந்து.

**பார்வை:**

1. தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலரின் கடிதம் ந.க.எண்.680/எல்1/சிஜி–70/2024, நாள்.14.09.2024
2. பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள், சென்னை 6 ந.க.எண் 023758/பிடி2/இ1/2024, நாள் 14.10.2024
3. பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள், சென்னை 6 ந.க.எண் 023758/பிடி2/இ1/2024, நாள் 14.10.2024, 17.10.2024 24.10.2024 ,11.11.2024, 13.11.2024 , 19.11.2024 ,27.11.2024 மற்றும் 31.12.2024

******

பார்வை–2 யில் காணும் கடிதங்களின் படி, 2024 – 2025 ஆம் கல்வியாண்டில் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் உயர்கல்விக்குச் செல்ல ஏதுவாக பள்ளிக் கல்வி இயக்ககத்தின் வாயிலாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

போட்டித் தேர்வுகள் எழுத விருப்பமுள்ள மாணவர்களை போட்டி தேர்வுகளுக்கு தயார்படுத்துவதற்கு உயர் தொழில்நுட்ப ஆய்வக வசதி இருக்கக்கூடிய மேல்நிலைப் பள்ளிகள் வட்டார அளவில் உயர்கல்வி வழிகாட்டி மையங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இம்மாணவர்களின் உயர்கல்வி விருப்பத்திற்கேற்ப உரிய பயிற்சிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இம்மாணவர்களின் உயர்கல்வி விருப்பத்தினை பள்ளி EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும், பதிவேற்றம் செய்த மாணவர்களை வழங்கப்பட்டுள்ள வட்டாரங்களில் செயல்படும் உயர்கல்வி வழிகாட்டுதல் மையங்களில் சனிக்கிழமைகளில் நடைபெறும் பயிற்சியில் கலந்து கொண்டு உயர்கல்வி சேர்க்கைக்கான பல்வேறு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பெற்றுக் கொண்டு போட்டித் தேர்வுகளுக்காக தங்களை தயார்படுத்திக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது

**மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் பணிகள்:**

- வட்டார உயர்கல்வி மையங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு தகவல் அனுப்பி போட்டித்

தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் சனிக்கிழமைகளில் நடைபெறுவதை உறுதி செய்திடல் வேண்டும்.

- இப்போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளுக்கு மாணவர்கள் சார்ந்த பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் / பெற்றோர் /ஆசிரியர் அல்லாத பணியாளர்களின் துணையோடு பாதுகாப்பாக சென்று வருவதை உறுதி செய்ய வேண்டும்.
- இப்பணிக்கு விருப்பம் தெரிவித்துள்ள ஆசிரியர்கள், ஆய்வக உதவியாளர்கள்(Lab Assistants) மற்றும் ஆய்வக நிர்வாகிகள் (Administrator Cum Instructor) வாரந்தோறும் சனிக்கிழமை வகுப்புகளுக்கு சென்று வருவதன் பொருட்டு அவர்களுக்கு சார்ந்த தலைமையாசிரியர்கள் ஈடுசெய்யும் விடுப்பு வழங்க அறிவுறுத்த வேண்டும்.
- மாணவர்களின் உயர்கல்வி விருப்பத்தினை EMIS தளத்தில் பதிவேற்றம் செய்யவும், விருப்பமுள்ள மாணவர்கள் இப்பயிற்சியில் கலந்து கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சார்ந்த வட்டாரங்களில் உள்ள மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்கிட வேண்டும். .

**வட்டார உயர்கல்வி மையங்களின் தலைமையாசிரியர்கள் / வட்டார ஒருங்கிணைப்பாளர் தலைமையாசிரியர்களின் பணிகள் :**

- உயர்கல்வி வழிகாட்டி மையங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பள்ளிகளின் தலைமையாசிரியர்கள், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மாணவர்களுக்கு போட்டி தேர்வுகள் சார்ந்த பயிற்சிகள் வழங்குவதற்கு தகுந்த அனுமதி வழங்குதல் வேண்டும்.
- இப்போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளுக்கு மாணவர்கள் சார்ந்த பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் / பெற்றோர் / ஆசிரியர் அல்லாத பணியாளர்களின் துணையோடு பாதுகாப்புடன் பங்கேற்பதை உறுதி செய்ய வேண்டும்.
- விருப்பத்தின் வாயிலாக வட்டார உயர்கல்வி மையங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் உரிய ஏற்பாடுகளான பயிற்சிக்கான கூட்டரங்கு மற்றும் பிற உபகரணங்கள் (Drinking water ,Hi Tech Lab facility, Mike, Speaker,WiFi , Projector உள்ளிட்ட வசதிகள்) பயிற்சி நடத்துவதற்கு ஏதுவாக ஒதுக்கீடு செய்து தருதல் வேண்டும்.
- இப்பணிக்கு விருப்பம் தெரிவித்து வாரந்தோறும் சனிக்கிழமை வகுப்புகளுக்கு வரும் ஆசிரியர்கள், ஆய்வக உதவியாளர்கள்(Lab Assistants) மற்றும் ஆய்வக நிர்வாகிகளுக்கு (Administrator Cum Instructors ) சார்ந்த தலைமையாசிரியர்கள் வருகைச் சான்றிதழ் (Attendance Certificate) வழங்குவதும், அப்பணி நாளுக்கு (சனிக்கிழமை ) ஈடாக ஈடுசெய்யும் விடுப்பு வழங்குவதையும் உறுதி செய்ய வேண்டும்.

**பள்ளித் தலைமையாசிரியர்களின் பணிகள் :**

- இப்போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளுக்கு மாணவர்கள் சார்ந்த பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் / பெற்றோர் /ஆசிரியர் அல்லாத பணியாளர்களின் துணையோடு பாதுகாப்பாக சென்று வருவதை உறுதி செய்ய வேண்டும்.
- இப்பணிக்கு விருப்பம் தெரிவித்துள்ள ஆசிரியர்கள், ஆய்வக உதவியாளர்கள்(Lab Assistants) மற்றும் ஆய்வக நிர்வாகிகள் (Administrator Cum Instructors ) சனிக்கிழமை வகுப்புகளுக்கு சென்று வருவதன் பொருட்டு சார்ந்த தலைமையாசிரியர்கள் அவர்களுக்கு ஈடுசெய்யும் விடுப்பு வழங்க வேண்டும்.

**மாவட்ட ஒருங்கிணைப்பாளரின் (உயர்கல்வி வழிகாட்டி – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி) பொறுப்புகள்:**

- வட்டார அளவில் நடைபெறவிருக்கும் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளில் கலந்துக் கொள்வதற்கு மாணவர்களின் விருப்பத்தினை கேட்டு (**இணைப்பு –1 இல் வழங்கப்பட்டுள்ள (Demo Video)** காணொளியின் கண்டு,) பதிவேற்றம் செய்தல் வேண்டும்.
- EMIS தளத்தில் விருப்பம் தெரிவித்துள்ள மாணவர்களுக்கு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் வழியாக உரிய தகவல் வழங்கி வட்டார அளவில் நடைபெற விருக்கும் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளுவதை உறுதிச் செய்தல் வேண்டும்.
- பயிற்சி வகுப்புகள் நடைபெறும் நாட்களில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் வருகையினை உறுதி செய்திடல் வேண்டும்.
- பயிற்சி வகுப்புகள் நடைபெறுவதற்கு முன்பு இப்பயிற்சிக்கு தேவையான உள்ளடக்கம் (Content) வட்டார உயர்கல்வி மையங்களுக்கு சென்றடைவதை உறுதி செய்தல் வேண்டும். **(வகுப்பிற்கான டிஜிட்டல் உள்ளடக்கங்கள் மாநில இயக்குநரகத்தில் இருந்து மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும்)**
- ஒவ்வொரு பயிற்சி வகுப்பிற்கான உள்ளடக்கங்களையும் பிரதியாக அச்சிட்டு, மாணவர்களுக்கு வழங்கும் வகையில் வட்டார உயர்கல்வி மையங்களுக்கு வட்டார வள மைய மேற்பார்வையாளர் வாயிலாக (Block Supervisor) அனுப்புதல் வேண்டும்.

<u>பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கான பணிகள் (Block Level Resource Persons) :</u>

- பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அனைவரும் சனிக்கிழமைகளில் உயர்கல்வி வழிகாட்டி மையங்களுக்கு சென்று வழங்கப்பட்டுள்ள பயிற்சிக்கான கால அட்டவணையின் படி போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளை மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

- பயிற்சி பெற்ற பிறகு ஆசிரியர்கள் முதற்கட்டமாக, ஜனவரி 4 ஆம் தேதி **(04.01.2025–சனிக்கிழமை)** முதல் மாணவர்களுக்கு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகள்) வழங்குதல் வேண்டும்.
- கால அட்டவணை மற்றும் பாடத்திட்டம் சார்ந்து ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் **இணைப்பு–2 இல்** வழங்கப்பட்ட மாதிரிப் பள்ளிகளின் உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களை அணுகலாம்.
- ஒவ்வொரு பயிற்சி வகுப்பு நடைபெறுவதற்கு முன்பு, மாவட்ட ஒருங்கிணைப்பாளரை (உயர்கல்வி வழிகாட்டி – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி) தொடர்பு கொண்டு பயிற்சி வகுப்பு நடத்துவதற்கான உள்ளடக்கத்தை ( Content) பெற்றுக் கொள்ள வேண்டும்.
- பயிற்சி வகுப்புகள் நடைபெறும் நாட்களில் ஆசிரியர்கள் வர இயலாத சூழ்நிலை ஏற்படின் அவ்விவரத்தினை முன்கூட்டியே மாவட்ட ஒருங்கிணைப்பாளரிடம் (உயர்கல்வி வழிகாட்டி – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி) தெரிவித்து மாற்று ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

**<u>உயர் தொழில் நுட்ப ஆய்வக நிர்வாகி/ ஆய்வக உதவியாளர்களின் பணிகள் (AI & Lab Assistant) :</u>**

- பயிற்சி பெற்ற உயர் தொழில்நுட்ப ஆய்வக பயிற்சி நடைபெறும் பள்ளிகளில் உள்ள உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள்( High –Tech Lab ) தயார் நிலையில் உள்ளதை உறுதி செய்திடல் வேண்டும்.
- போட்டித் தேர்வுகளுக்கான பாடத் திட்டம் உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தில் தரவிறக்கம் செய்யப்பட்டு பயிற்சி வழங்குவதற்கு ஏதுவாக தயார் நிலையில் இருத்தல் வேண்டும். உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தில் ஏதேனும் பழுது ஏற்பட்டால் உடனடியாக சார்ந்த மாவட்ட ஒருங்கிணைப்பாளரிடம் (உயர்கல்வி வழிகாட்டி – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி) தெரிவித்தல் வேண்டும்.

**<u>மாதிரிப் பள்ளி உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களின் பொறுப்புகள் :</u>**

- பயிற்சி வகுப்புகள் நடைபெறும் நாட்களில், அருகில் உள்ள பயிற்சி மையங்களுக்குச் சென்று ஆசிரியர்களுக்கு துணை புரிதல் வேண்டும். மேலும் அவர்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் அதனைத் தெளிவு படுத்த வேண்டும்.

**<u>இணைப்புகளின் விவரங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| 1 | EMIS தளத்தில் பதிவேற்றம் செய்வதற்கான காணொளி (Demo Video) | |

| | | |
|---|---|---|
| 2 | மாதிரிப் பள்ளி உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களின் விவரங்கள் மற்றும் மாதிரிப் பள்ளிகள் முகவரி | |

இணை இயக்குநர் (தொழிற்கல்வி)

**பெறுநர்**

சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

(அரியலூர், செங்கல்பட்டு, சென்னை, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தென்காசி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பூர், திருவண்ணாமலை, திருவாரூர், வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர்)

**நகல்**

உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள்,சென்னை–6.– அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.